செ.வெ.எண்-23 நாள்-12.07.2021

# பத்திரிக்கைச் செய்தி

தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை மூலம் தேசிய தோட்டக்கலை இயக்கம் 2021-22 ஆம் ஆண்டில் விவசாயிகள் பயன்பெறும் பொருட்டு மானியத்துடன் கூடிய பல்வேறு திட்ட இனங்களுடன் அரியலூர் மாவட்டத்தில் ரூ.209.76 இலட்சம் செலவினத்தில் செயல்படுத்தப்படவுள்ளன.

**புதிய தோட்டங்கள் அமைத்தல்** - தோட்டக்கலை பயிர்களில், வீரிய ஒட்டு இரக காய்கறிகள், கொய்யா, பப்பாளி, எலுமிச்சை, சம்மங்கி, மல்லிகை, உதிரி மலர்கள், மற்றும் முந்திரி ஆகியவற்றில் புதிய தோட்டங்கள் அமைப்பதற்கு ரூ.133.23 இலட்சம் செலவில் 804 எக்டர் பரப்பிற்கு் மானியம் வழங்கப்படுகிறது. மானியத் தொகைக்கு நடவு பொருட்கள் மற்றும் இடுபொருட்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ளது. மேலும், அரியலூர் மாவட்டத்தில் புதிதாக டிராகன் பழ சாகுபடியினை ஊக்குவிக்க 1 எக்டருக்கு ரூ.96,000/- மானியம் வீதம் 2 எக்டருக்கு ரூ.1.92 இலட்சம் பெறப்பட்டுள்ளது.

**பாதுகாக்கப்பட்ட சாகுபடி** - நிழல்வலைகுடில்கள் மற்றும் நிலப்போர்வை போன்ற உயர் தொழில்நுட்ப சாகுபடி முறைகளை உள்ளடக்கிய பாதுகாக்கப்பட்ட சாகுபடி இனத்திற்கு ரூ.11.45 இலட்சம் செலவினத்தில் நிழல்வலை குடில்கள் 3000 சதுரமீட்டர் பரப்பிலும், நிலப்போர்வை 5 எக்டர் பரப்பிலும் 50 சதம் மானியத்தில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

**பண்ணை இயந்திரமயமாக்கல்** - பண்ணை இயந்திரமான பவர் டில்லர்கள் 25 சத மானியம் முதல் 50 சத மானியம் வரை அனுமதிக்கப்பட்டு அரியலூர் மாவட்டத்திற்கு ரூ.6 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**இதரவை** - தோட்டக்கலை பயிர்களுக்கான சந்தை உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்த மானியத்துடன் கூடிய ஊரக சந்தை, சில்லரை விற்பனை நிலையம் மற்றும் நடமாடும் விற்பனை நிலையம் அமைக்க விவசாயிகள் மற்றும் விவசாய உற்பத்தி குழுக்கள் வரவேற்கப்படுகின்றனர். இதற்காக ரூ.3 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாண்டின் சிறப்பு திட்டமாக தோட்டக்கலைப்பயிர்களில் மகரந்த சேர்க்கையை ஊக்குவிக்கும் பொருட்டு 40 சதம் மானியத்தில் தேனீ வளர்ப்பிற்கு ரூ.12 இலட்சம் , 50 சதம் மானியத்தில் முந்திரி பழைய தோட்டங்கள் புணரமைப்பதற்கு ரூ.20 இலட்சமும், மண்புழு உரம் தயாரிக்கும் அமைப்பினை ஊக்கப்படுத்த ரூ.5.8 இலட்சமும், பண்ணைகுட்டை அமைப்பதற்கு மானியத்தைாகை ரூ.7.50 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

எனவே, தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின்கீழ் பயன் பெற விரும்பும் விவசாயிகள் தங்கள் நிலத்தின் கணிணி சிட்டா. அடங்கல், குடும்ப அட்டை நகல், புகைப்படம் மற்றும் மானியத்தின் ஒரு பகுதியை வங்கிக் கணக்கின் மூலம் பெற தேசிய மயமாக்கப்பட்ட வங்கி ஏதேனும் ஒன்றில் கணக்கு வைத்திருக்கும் வங்கி கணக்கு புத்தக முன்பக்க நகல் ஆகியவற்றுடன் தங்களது பெயர்களை அந்தந்தப்பகுதி வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் அலுவலகத்தில் பதிவு செய்து பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**